***கவனிக்க***.-*2022.12.02 ஆந் திகதிய 2309 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II(அ), பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2310 - 2022 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2022.12.09

*2310 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1954 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1962 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1951-B 82408-5,413 (2022/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

*கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தின் திணைக்கள சிரேஷ்ட நிறைவேற்று சேவை உத்தியோகத்தர் சேவை வகுதியின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை – 2022*

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் சிரேஷ்ட நிறைவேற்று சேவை உத்தியோகத்தர் சேவை வகுதியின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2023, தை மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி உரிய திகதியில் அறிவிக்கப்படும். இந்த நேர்முகப் பரீட்சையினைப் பிற்போடுதல் அல்லது இடை நிறுத்தும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உண்டு. பதவியுயர்த்தப்படும் திகதியாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி கருதப்படும்.

இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட ஆண்/ பெண் இரு பாலாரிடம் இருந்தும் இப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. தகைமைகள்.-**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது ;

(ஈ) இப்பதவிக்கு பதவியுயர்த்துவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் திகதிக்கு கிட்டிய ஐந்து (05) ஆண்டுகளுக்குள் தற்போது வகிக்கும் பதவியின் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமாக அல்லது உயர் மட்டத்தில் காணப்படல் வேண்டும்.

(உ) அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சை திகதி வரையான கால எல்லையும் உள்ளடக்கப்படல் வேண்டும்)

(ஊ) சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென்பது உத்தியோகத்தர் அனைத்து தகைமைகளையும் இங்கு 6 (II) மற்றும் 6 (III) இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் தினத்தில் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ii) *கல்வித் தகைமைகள்.-* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்படும் விடய எல்லைக்கு ஏற்புடைய பட்டப்பின் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(iii) *அனுபவம்.-* கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதி (SL - 01) I ஆம் தரப் பணிப்பாளர் (கரையோர வள முகாமைத்துவம்) பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது ஐந்த (05) ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

மேற்குறித்த தகைமைகளுடன் பதவியுயர்வுக்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் சேவை வகுதியின்/ பதவிகளுக்கு ஏற்புடைய நிறைவேற்றுத் தரத்தில் 18 ஆண்டுகளுக்கு குறையாத செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

3. **சேவை நிபந்தனைகள்**.-

(i) **சம்பளம்**.- இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு:
பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 பிரகாரம் சம்பளத் திட்டம் SL - 3 ஆம் சம்பளத் தொகுதியின் ரூபா 88,000.00 - 12 × 2,700 - ரூபா 120,400.00 ஆகும்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. (ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.)

(iii) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பிரதேசத்திலும் கடமை புரிவதற்குரிய நிபந்தனைக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(iv) பதவி ஓராண்டு கால பதில் கடமைக்கால எல்லைக்கு உட்படும்.

4. தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை.

புள்ளிகள் வழங்கும் முறை

| புள்ளிகள் வழங்கும் பிரதான தலைப்பு | | ஆகக்கூடிய புள்ளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) மேலதிக சேவை அனுபவம்<br>➢ இலங்கை நிர்வாக சேவை I ஆம் தரத்தின் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அல்லது கரையோரப் பாதுகாப்பு கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதியின் (SL - 01) ஆம் தரப் பணிப்பாளர் (கரையோர வள முகாமைத்துவம்) பதவியில் 05 ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துக்கு மேலதிகமாக பூர்த்தி செய்துள்ள செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துக்காக அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 1/ 2019 பிரகாரம் ஆகக்கூடிய மேலதிக சேவைக் காலத்துடன் கூடிய விண்ணப்பதாரிக்கு ஆகக்கூடிய புள்ளிகளும் ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு அதற்கு சமவிகிதாசாரமாக புள்ளிகளும் வழங்கப்படும்.<br>(3 மாதங்களுக்கு குறைவான காலத்துக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) | | 40 |
| (2) மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :<br>(a) தொழில் துறையுடன் தொடர்புடைய பாடநெறிகள்<br>• டிப்ளோமா பாடநெறி (1 ஆண்டு காலத்துக்கு மேற்பட்ட) 10 புள்ளிகள்<br>• டிப்ளோமா பாடநெறி (6-12 மாதங்களுக்கு இடைப்பட்ட) 08 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திரப் பாடநெறி (3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட) 04 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திரப் பாடநெறி (3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட) 02 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒரு பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br>* ஆட்சேர்க்கும் போது ஏனைய பதவியுயர்வின் போது அல்லது வினைத்திறன் காண் தடைக்காக கருத்திற் கொள்ளப்பட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | 10 | 15 |
| (b) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கொள்ளளவு மேம்பாட்டு பயிற்சிப் பாடநெறி/ நிகழ்ச்சித்திட்டங்களுக்காக<br>• 01 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட 05 புள்ளிகள்<br>• 01 வாரம் - 01 மாதத்துக்கு இடைப்பட்ட பயிற்சி 02 புள்ளிகள்<br>• 01 வாரத்துக்கு குறைவான பயிற்சி 01 புள்ளி<br>* ஆகக்கூடிய புள்ளி எல்லைக்கு உட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிப் பாடநெறி/ நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |

| புள்ளிகள் வழங்கும் பிரதான தலைப்பு | | ஆகக்கூடிய புள்ளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| (3) துறை தொடர்பான பங்களிப்பு -<br>கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அத தொடர்பான கருத்திட்டங்கள் தொடர்பாக வழங்கிய பங்களிப்பு ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது ஒரு கருத்திட்டத்துக்கு 05 புள்ளிகள் வீதம் | | 20 |
| (4) கணினி மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி<br>(a) ஆங்கில பாடல் வரி<br>• டிப்ளோமா பாடநெறி (6 மாத காலத்துக்கு மேல்) 10 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திரப் பாடநெறி (3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம்) 05 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திர பாடநெறி அல்லது குறுங்கால பயிற்சி (3 மாதங்களுக்கு குறைவான காலம்) 03 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒரு பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br>(b) கணினி தகவல் பாடநெறி<br>• டிப்ளோமா பாடநெறி (6 மாத காலத்துக்கு மேல்) 10 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திரப் பாடநெறி (3-6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம்) 05 புள்ளிகள்<br>• சான்றிதழ் பத்திர பாடநெறி அல்லது குறுங்கால பயிற்சி (3 மாதங்களுக்கு குறைவான காலம்) 03 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒரு பாடநெறிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 10<br>10 | 20 |
| (5) உளப்பாங்கு மற்றும் ஆளுமை 01 புள்ளி | | 05 |
| மொத்தம் | | 100 |

தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை வரிசைக் கிரமத்தின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமையுடைய விண்ணப்பதாரர்களில் இருந்து பதவிக்கு ஆட்சேர்க்கப்படும்.

5. பெறுபேறுகளை வெளியிடுதல்.- தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை வரிசைக் கிரமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை.-**

(i) மாதிரி விண்ணப்பப்படிவம்.- இவ் அறிவித்தல் முடிவில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தினை தனது கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தின் அனைத்து பிரிவுகளும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் தனக்கு ஏற்புடையதாகாத பிரிவுகள் இருப்பின் அவற்றை "ஏற்புடையதன்று" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் வரிகளை வெறுமையாக விடுவதனால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு இடம் உண்டு என்பதனை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 01 ஆம் இலக்கம் முதல் 08 ஆம் இலக்கம் வரை முதலாவது பக்கத்திலும்) 09 முதல் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், 16 மற்றும் 17 மூன்றாம் பக்கத்திலும் அமையும் விதமாக A4 அளவு கடதாசியில் தயாரிக்கவும்) விண்ணப்பப்பத்திரத்தை தயாரிக்கும் போது நேர்முகப் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்பத்திரங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தின் ஒரு பிரதியை தன் வசம் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும். அறிவித்தலில் உள்ளடங்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்துக்கு அமைவாக அமையப் பெறாத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பப்பத்திரங்கள் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும் என்பதனால் விண்ணப்பப்பத்திரத்தை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா மற்றும் அனைத்து தகல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி மீண்டும் பரீட்சித்துப் பார்க்கவும்.

(ii) விண்ணப்பப் பத்திரங்களை 2023.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் நேர்முகப் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) அரசாங்கத் திணைக்களம்/சபை/கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் பத்திரங்களை தான் கடமை புரியும் திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2023.01.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமை பணிப்பாளருக்கு கிடைக்கும் விதமாக அனுப்புவதற்கான கோரிக்கையுடன் தமது விண்ணப்பங்களை திணைக்களங்களின் பிரதானிகளுக்கு கால நேரத்துடன் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களிடம் கேட்கப்படுகிறது. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர் ஒருவரது தனிப்பட்ட பெயரில் விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது. திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுமாயின் நிராகரிக்கப்படும்.

(iv) கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.- தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரி ஒருவரின் கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களப் பிரதானி அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், அவற்றை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலை ஒன்றின் அதிபர், கடற்படை, விமானப்படை அல்லது இராணுவத்தின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், வருடாந்தம் ரூபா 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் அரச நிரந்தர உத்தியோகத்தர், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர், ஏனைய மதத்தளம் ஒன்றுக்கு பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தினை வகிக்கும் ஒருவராக காணப்படல் வேண்டும்.

07. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்.- திகதி குறிக்கப்பட்ட பின்னர் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல் விண்ணப்பதாரர் ஒருவர் அதற்குரிய தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படமாட்டாது.

08. அடையாளம்.- விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது நேர்முகப் பரீட்சைக் குழு திருப்தியடையும் வகையில் தனது அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவது ஓர் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணம் ஒன்றை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. தலைமை தொடர்பான ஆவணங்கள்.-

(i) விண்ணப்பத்திரத்துடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறே விதிக்கப்பட்டுள்ளவாறு, தேவையான அனைத்து விவரங்களையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வாறு தேவையான விடயங்கள் பூர்த்தியாகாத விண்ணப்பங்கள் இருப்பின் அது நிராகரிக்கப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் ஆவணங்கள் மூலம் சான்றுகளை முன்வைத்து தனத தகைமையினை உறுதி செய்தல் வேண்டும்.

(iii) கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் அத்தியாவசியமாகும்.

(அ) நன்னடத்தை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவர் ஒப்பமிட்ட சான்றிதழ்.
*குறிப்பு* : அச்சான்றிதழை சமாதான நீதவான், சட்டத்தரணி, குடியிருக்கும் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது வருடாந்தம் ரூபா 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர

உத்தியோகத்தர், பொதுவாக பிரசித்தி பெற்ற நேரடியாக அறிவிப்பதன் மூலம் தகவல் பெற்றுக் கொள்ள முடியுமான ஒருவரிடம் பெற்றுக் கொள்ள முடியும். சான்றிதழை வழங்கும் நபரின் பதவி, பெயர் மற்றும் முகவரியினை அதில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். (அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் நன்னடத்தை சான்றிதழை சமர்ப்பிக்கத் தேவையில்லை.)

(ஆ) விண்ணப்பதாரர்களின் பிறப்பு பதிவுக் குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பினை பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் தொடர்பாக) பதிவாளர் நாயகம் வழங்கிய வயது தொடர்பான விசேட சான்றிதழ்.

குறிப்பு :

(i) பாடசாலைகளின் பயன்பாட்டுக்காக அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்பு பதிவுக் குறிப்புக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சான்றிதழ் பிரித்தெடுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது அண்ணளவான வயதுச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிறப்புச் சான்றிதழில் காட்டப்பட்டுள்ள பெயர்/ பெயர்கள் மற்றும் விண்ணப்பதாரி பொதுவாக பயன்படுத்தும் அவ்வாறே அவர் பரீட்சை பரீட்சைக்குத் தோற்றும் பெயர்/ பெயர்கள் ஆகியவற்றுக்கு இடையில் வித்தியாசம் இருப்பின் உரியவாறு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (110 ஆம் அத்தியாயத்தின்) 27 ஆம் அல்லது 28 ஆம் விதிகளின் பிரகாரம் தனது பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/ பெயர்களை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசையாக பதிவு செய்யும் சான்றிதழ் அல்லது பரம்பரையாக உரித்தான பிரசாவுரிமையினைப் பெற்றுள்ளதாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதனைக் காட்டும் கடிதம் (உரியவாறு) ;

(iv) கல்வித்தகைமை தொடர்பான மூலப் பிரதி அல்லது அவ்வாறு சான்றிதழ் வழங்கப்படவில்லை எனின் அது தொடர்பான ஏனைய கடமை ஆவணம் அதாவது விண்ணப்பதாரர் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என பல்கலைக்கழகம் ஒன்றின் பதிவாளரால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ ஆவணம்;

(v) விண்ணப்பத்தை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் தேவையான சகல ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. கேட்கப்படும் போது தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இயலாத அல்லது அவற்றை சமர்ப்பிப்பதற்கு தாமதிக்கும் உத்தியோகத்தர் இருப்பாராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு பொருத்தமற்றவர் எனக் கருதப்படுவார்.

10. போலியான தகவல்களை வழங்குதல்.- இக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் அதற்கு தோன்றுவதற்கு பொருத்தமற்றவர் எனத் தெரியவரின் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது தேர்வுப் பரீட்சை நடாத்தப்படும் போது அல்லது அதன் பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகராண்மை செல்லுபடியற்றதாக்கப்பட முடியும். விண்ணப்பதாரர் ஒருவர் தெரிந்து கொண்டே போலியான தகவல் வழங்கியுள்ளதாக அல்லது ஏதேனும் முக்கியமான விடயம் ஒன்றினை தெரிந்து கொண்டே மறைத்ததாக தெரியவரின் அவர் கட்டமைக்கப்பட்ட இந்த நேர்முகப் பரீட்சைக்குப் பொருத்தமற்றவராக இருந்தார் என அவரது சேவைக் காலத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உறுதி செய்யப்படுமாயின் அதுவே அவர் சேவையில் இருந்து நீக்குவதற்கு காரணமாக அமைய முடியும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உரியவாறு வழங்காத விண்ணப்பதாரர்களின் அபேட்சகராண்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

11. இப் பிரமாணங்களின் மூலம் விவரிக்கப்படாத ஏற்புடைய வேறு ஏதும் விடயம் காணப்படுமாயின் அது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

12. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தல் செயல்வலுப் பெறும்.

செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தின்
திணைக்கள சிரேஷ்ட நிறைவேற்று சேவை உத்தியோகத்தர் சேவை வகுதியின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை - 2022

அலுவலக உபயோகத்துக்காக [ ]

01. பெயர் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி முதல் எழுத்துக்களுடன் பெயர் : ..........
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில், உதா. SILVA A. B.)

1.2 முதல் எழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் : ..........
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் (தமிழில்) : ..........

..........

02. 2.1 தனிப்பட்ட முகவரி :..........

2.2 அலுவலக முகவரி :..........

2.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி : ..........

..........

2.4 தொலைபேசி இலக்கம் : ..........

03. 3.1 பிறந்த திகதி :- ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

3.2 2023.01.02 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : .......... மாதங்கள் :.......... நாட்கள் :..........

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

04. 4.1 பால் - ஆண்/பெண் : ஆண் [ ]
பெண் [ ]

4.2 விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை விவாகமானவர் [ ]
விவாகமாகாதவர் [ ]
விதவை [ ]

05. திணைக்கள நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவையின் பதவிக்கு முதலாவதாக நியமிக்கப்பட்ட திகதி :..........

06. திணைக்கள நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 இற்கு பதவியுயர்வு பெற்ற திகதி :..........

07. திணைக்கள நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதி/ இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 இன் பதவி ஒன்றில் 05 ஆண்டுகள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் நிறைவடையும் திகதி :..................................

08. திணைக்கள நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை வகுதி/இலங்கை நிர்வாக சேவையின் பதவி ஒன்றில் ........ ஆம் திகதிக்கு கடமை புரிந்துள்ள முழு சேவைக்காலம் :..................................

09. நீங்கள் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :..................................

ஆம் எனில் காரணம் விளக்கவும் :.................................................

10. சம்பளம் அற்ற லீவு :

| தொடர் இலக்கம் | சம்பளம் அற்ற லீவு காலம் | லீவின் தன்மை (ஏற்புடைய ஆவணங்களை இணைத்தல் வேண்டும்) |
|---|---|---|
| i. | | |
| ii. | | |

11. கல்வித் தகைமைகள் : (பட்டப்பின் பட்டம் தொடர்பான விபரம்) :

| பல்கலைக்கழகத்தின் பெயர் | பட்டம் | பட்டத்தின் வகுப்பு | ஆண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

12. மேலதிக சேவை அனுபவம் (அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்) :

| பதவி மற்றும் சேவை நிலையம் | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

13. மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் (அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்) :

| பூர்த்தி செய்துள்ள பயிற்சிப் பாடநெறிகள்/நிகழ்ச்சித்திட்டங்கள்/தொழில் தகைமைகள் | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

14. துறைக்கான பங்களிப்பு :

| வழங்கியுள்ள பங்களிப்பு | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

15. ஆங்கிலம்/கணினிப் பாடநெறி (அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்) :

| *பூர்த்தி செய்துள்ள ஆங்கிலம்/கணினிப் பாடநெறி* | *காலம்* |
|---|---|
| | |
| | |
| | |

16. இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதி செய்கிறேன். நான் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட முன்னர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானதென தெரிய வருமாயின் நான் பொருத்தமற்றவராவதுடன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரிய வருமாயின் எந்தவித நட்டஈடும் இன்றி நான் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

..................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...................

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் (ஏற்புடையதாகாத சொற்களை வெட்டி விடவும்) :

இவ் விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................................. ஐ எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரியுமெனவும், அவர்................... மாதம் ................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டாரெனவும் நான் உறுதி செய்கின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் : .................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ....................................................
பதவி :....................................................
முகவரி : ....................................................
பதவி முத்திரை : ....................................................
திகதி : .....................................................

*குறிப்பு.*- விண்ணப்பப் பத்திரம் வர்த்தமானி அறிவித்தலின் 6 (iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

18. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ் விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................................... இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் கடமை புரியும் ஒருவர் என்பதுடன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின் இந்த நிறுவனத்தின் கடமையில் இருந்து அவரை விடுவிக்க முடியும்./விடுவிக்க முடியாது.

.................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

நிறுவனத் தலைவரின் பெயர் : ....................................................
பதவி :....................................................
சேவை நிலைய முகவரி : ....................................................
திகதி : ..................................................

12-248

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022 திசெம்பர்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது கொழும்பில் நடாத்தப்படும்.

1. பரீட்சை நடாத்தப்படுவது சம்பந்தமாக ஆயுர்வேத ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும். இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை விளக்கப் பிரமாணக் குறிப்பிற்கமைய தகைமைகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தமது விண்ணப்பப்படிவத்தினைத் தயாரித்துக் கொள்வதுடன் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை தமது நிறுவனத்தலைவரினூடாக 2022.12.23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு "பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மஹரகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022 திசெம்பர் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதிற்கு பின்னராகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

3. முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் போது எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இருப்பினும் அதற்குப்பின்பு தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பரீட்சைக்கு முழுமையாகத் தோற்றுவதாயின் ரூபா 230.00 வும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 57.50 வும் செலுத்தப்படவும் வேண்டும். இவ்வாறு செலுத்தப்பட வேண்டிய தொகையானது மஹரகமையில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் கணக்கிலக்கம் 7041294 இற்கு ஆயுர்வேத ஆணையாளரின் கணக்கிற்கு வரவிடப்பட்டு பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் அக்கட்டணமானது மீளளிக்கப்படமாட்டாது.

"விண்ணப்பதாரியின் முகவரி சரியாக எழுதப்பட்ட 9 × 4 அங்குல அளவிலான முத்திரை ஒட்டப்பட்ட இரண்டு கடித உறைகளினை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்."

**4. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாடவேளைகளிலும் ஆயுர்வேதத்திணைக்களமானது திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு கீழ்க்குறிப்பிடும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

i. ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

5. 2020.10.27 ஆம் திகதிற்கு முன்பு, பின்பு நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

6. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளர் மூலம் பரீட்சை நேர அட்டவணையும் அனுமதி அட்டையும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் தமது கையொப்பம் சரியான முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி பெற்ற அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். அப்படியான அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படாது. யாதேனும் ஒரு உத்தியோகத்தருக்கு பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்த பட்சம் ஏழு (07) நாட்களுக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பட்சத்தில் கீழ்க் குறிப்படும் தகவல்களுடன் 011-2745962 எனும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது "பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்

i. பரீட்சையின் பெயர்:
ii. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:
iii. விண்ணப்பதாரியின் முகவரி:
iv. விண்ணப்பப்பத்திரம் தபாலில் இடப்பட்ட தபால் நிலையத்தின் பெயர், பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி

7. ***பரீட்சைத் திட்டம்.***- (இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு உரித்தான சேவை விளக்க பிரமாணக் குறிப்பிற்கேற்றவாறு)

i. நிதிப்பிரமாணங்கள் - கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் முதலாம் தொகுதி (10 ஆம் அத்தியாயம் தவிர)

ii. தாபன விதிக் கோவை மற்றும் பணி ஒழுங்குபடுத்தல் சட்டக்கோவை - கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று

(அ) தாபன விதிக் கோவை மற்றும் அரசசேவை ஆணைக்குழுவின் பணி ஒழுங்குபடுத்தல் சட்டக்கோவை தொடர்பான அறிவு

iii. மருத்துவமனை நிருவாகம்- கீழே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டமைந்த வினாப்பத்திரம் ஒன்று

(அ) மருத்துவமனை தொடர்பான நடைமுறையில் உள்ள பொதுவான விதிகளும் ஒழுங்கு விதிகளும்
(ஆ) மருத்துவமைனயை சுத்தமாக வைத்திருத்தல்
(இ) நோயாளிகள் தொடர்பான நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள்
(ஈ) நோயாளர்களுக்கு சரியான உணவு மற்றும் பானங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை
(உ) மருந்து உற்பத்தி நிலைய நிருவாகம்
(ஊ) நோயாளிகளை அனுமதிப்பது தொடர்பான வலுவிலுள்ள சட்டதிட்டங்கள்
(எ) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் ஏனைய சிற்றூழியர் வரை அவர்களின் கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு
(ஏ) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக நடைமுறைகள்
(ஐ) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சிய சாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்கு விதிகள்
(ஒ) ஆயுர்வேத செயன் முறைக் கோவை
(ஓ) மருத்துவமனையின் பொதுவான நிருவாக செயற்பாடுகள்

iv. அரச கரும மொழிப் பரீட்சை.-

1996.05.20 ஆம் பிரமாணத்திற்கேற்ப 2020.10.27 ஆம் திகதிக்கு முன்பு நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணபிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

அரச கரும மொழி வாய்மொழிப்பரீட்சை சிங்களம்/ தமிழ் (15 நிமிடங்கள்) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்காக

(அ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வினாக்களுக்கு தமிழ் மொழியில் விடையளித்தல்
(ஆ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்
(இ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வசனங்களை தமிழ் மொழியில் கூறுதல்

தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்காக

(அ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வினாக்களுக்கு சிங்கள மொழியில் விடையளித்தல்
(ஆ) சிங்கள மொழியில் கேட்கப்படும் வசனங்களை தமிழ் மொழியில் கூறுதல்
(இ) தமிழ் மொழியில் கேட்கப்படும் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்

2020.10.27 ஆம் திகதிக்குப் பின்பு நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் 2020.10.27 ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கேற்ப

| மொழி | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத மொழிமூலமொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் அவர்களிற்கு உரிய அரசகரும மொழித் தேர்ச்சியினை தகுதி காண் காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும். க. பொ. த. (சா/த) பரீட்சையில் தாய் மொழியின் பொருட்டு சித்தி பெற்றுக்கொள்ளப்படுவது இதற்குப் போதுமான தாகும். |
| ஏனைய அரசகரும மொழி | அரச நிருவாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதனோ டிணைந்த சுற்றறிக்கைகளிற்கேற்ப உரிய மட்டத்திற்குரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

(v) பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு பாடங்களிற்கும் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வசனங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் சிங்கள மொழி உரையே மேலோங்கும்.

எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2022, திசெம்பர் 06.

மாதிரி விண்ணப்படிவம்

ஆயுர்வேத மருத்துவ சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2022 திசெம்பர்

சுட்டெண் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
(பொருத்தமான எழுத்தைக் கூட்டில் இடவும்)
சிங்களம் - S தமிழ் - T

01. முதலெழுத்துக்களுடன் பெயர் (Mr /Mrs/ Miss) : ........................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

02. முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................
(சிங்களத்தில்/தமிழில்)

03. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ........................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

04. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ........................................
(சிங்களத்தில்/தமிழில்)

05. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

06. i கடமை புரியும் அலுவலகமும் விலாசமும்
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) : ........................................

ii. கடமை நிலையத்திற்குரிய மாகாணம்; : ........................................

07. i. கடமை புரியும் அலுவலகமும் விலாசமும்
(சிங்களத்தில்/தமிழில்) : ........................................

ii. தொலைபேசி இலக்கம் : ........................................

08. i. தற்போதைய பதவி : ........................................

ii. நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் : ........................................

09. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன் பரீட்சைக்கு கீழ்.வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களிற்கோ தோற்றி சித்தியடைந்துள்ளீர்களா? நிதிப்பிரமாணம்/தாபன விதிக் கோவை/மருத்துவமனை நிருவாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்) அப்படியாயின் பரீட்சை சுட்டெண், ஆண்டு, மாதம் என்பவற்றினைக் குறிப்பிடுக.

| பாடம் | பரீட்சைச் சுட்டெண் | ஆண்டும் மாதமும் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா?:-........................................................
பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாவிடின் செலுத்தப்பட்ட கட்டணத்தின் பெறுமதி.
(வங்கிப்பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்)

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள பரீட்சை விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

..................................,
பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும்.

**குறிப்பு**: பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாகக் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி................................................ எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.................................
உறுதி செய்பவரின் கையொப்பமும்
பதவி இலச்சினையும்.

பெயர் : ..................................................
பதவிப் பெயர் : ....................................................
முகவரி : ....................................................
திகதி : .....................................................

12-299

**கல்வி அமைச்சு**

இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழித்தேர்ச்சிப் பரீட்சை – 2022

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை 2023, மாச்சு மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

2. அதிபர் சேவையில் உள்ள ஒவ்வொரு அலுவலரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட நாளிலிருந்து (03) ஆண்டுகளுக்குள் இணைப்பு மொழியில் தேர்ச்சிப் பெற வேண்டும். சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு மொழித் தேவையை நிறைவு செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 08/2020 இன் படி, ஆங்கில வழியில் பட்டப்படிப்பு/முதுமாணி பெற்றுக்கொண்ட அலுவலர்கள், க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் (மேலதிக பாடமாக அல்லாமல்) சித்தி பெற்ற அலுவலர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் (மேலதிக பாடமாக அல்லாமல்) திறமை சித்தி அல்லது அதற்கு மேல் பெற்ற அலுவலர்கள் தவிர ஏனைய அலுவலர்கள் இந்த பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

3. இப்பரீட்சைக்குரியதான பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1885/ 31 ஆம் இலக்க 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக இப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்

| பாட இலக்கம் | பாடம் | நேரம் | புள்ளி | சித்தி பெற தேவையான இழிவளவுப் புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | பொது ஆங்கிலம் (General English) | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**பாடத்திட்டம்**

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate.

- Tenses and Numbers
- Sentences (Simple / Compound /Complex / Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study:

- Summary writing
- Report writing
- Essay writing

4. சித்தியடைவதற்காக இப்பரீட்சையில் பரீட்சார்த்தி குறைந்தபட்சம் 40% அல்லது அதனை விடக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேற்று ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

5. கீழே காட்டப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய, விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன், அதற்குரிய தகவல்களை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழியில் தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின்

போட்டோப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகின்றேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவம் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பப்படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீள கவனம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சை கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டுக்களின் போட்டோப் பிரதியை தம் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகின்றேன்.

6. பரீட்சை ஆணையாளர் நாயத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

7. விண்ணப்பப்படிவங்கள் 2023, சனவரி மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் “பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, பத்தரமுல்லை” என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அதிபர்/கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவைக்குப் பொறுப்பான அதிகாரி ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாக குறிப்பிட வேண்டியதுடன் குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு அறிவித்தலானது பத்திரிகை மூலம் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதபட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப் பத்திரத்தின் பிரதியை அனுப்ப வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தினையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்புவது பயன்மிக்கதாக அமையும். பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதி, விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சைக்கான பிரவேச பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக என ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

9. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் பரீட்சார்த்தி ஒப்பமிட்டு தாபன பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன், பரீட்சைத் தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டபப் பொறுப்பாளருக்கு திருப்தியளிக்குமாறு தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தங்களின் ஆளடையாளத்தை சரிபார்க்கும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்துள் நுழைய வேண்டும். தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடியும் வரை மற்றும் வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அவரை அடையாளம் காணும் வகையில், விண்ணப்பதாரர் முகத்தையும் இருகாதுகளையும் மறைக்காது இருக்க வேண்டும்.

*11.* **பரீட்சைக் கட்டணம்.-**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ஆ) முதற் தடவையாயின் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைகளுக்காவும் ரூபா 250.00 வீதம் அறவிடப்படும்.

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 20-03-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

*12.* பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டும் என்பதனை அறியத்தருகிறேன். மேலும் விண்ணப்பதாரர்கள் நாட்டில் தற்போதுள்ள நோய்த் தனிமை விதிகளை கடைபிடிக்க வேண்டும்.

*13.* இங்கு சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி இருக்கும்.

*14.* மேலும் இவ் அறிவித்தல் மூலம் தழுவப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்த, பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை - 2022**

**English Language Test for the Sri Lanka Principals' Service - 2022**

(அதிபர்/ கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

01. (அ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :..........................................................................................

(ஆ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :..........................................................................................

02. முகவரி

(i) சொந்த : ..........................................................................................

(ii) அலுவலகம் :..........................................................................................

(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :..........................................................................................

(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்துக்களில்)

03. (i) பால் ஆண்/பெண் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய கூட்டினுள் இலக்கத்தை இடவும்.)

(ii) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

(iii) பிறந்த திகதி :

வருடம் : மாதம்: திகதி :

04. தொலைபேசி இலக்கம் :
(i) கையடக்க :
(ii) நிலையான :

05. (i) அதிபர் சேவையின் வகுப்பு/தரம் : ----.
(ii) பாடசாலை/அலுவலகம் : ----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகம் : ----.

06. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரம்
பற்றுச்சீட்டு இல. :--------
தபால் அலுவலகம் :-------
திகதி :---------

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதி செய்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

......................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது பாடசாலையின்/ அலுவலகத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்து கின்றேன். மேலும், பரீட்சார்ததி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கின்றேன்.

.....................
அதிபர்/கோட்ட அல்லது வலயக்
கல்விப் பணிப்பாளர்/மேலதிக
மாகாணக் கல்விப் பணிப்பாளர்/
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம்.
(அதிபராயின் பாடசாலையின்
பெயரைக் குறிப்பிடுக)
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

முகவரி :.............
திகதி :.............
(பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)

12-233

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.